MINISTRY OF MANPOWER

# CONNECT with ACE

புலம்பெயர்ந்த தொழிலாளர்களுக்கான மாதாந்திர மின் செய்திமடல்



ஆக. 2022



## இந்த இதழில்:

முக்கிய அறிவிப்புகள்

ஆதரவுக்காக நீங்கள் யாரை அணுகலாம் என்பதைப் பற்றிய உதவிக்குறிப்புகள்

தேசிய தினம் சிறப்பம்சங்கள்

# முகக்கவசம்-அணியும் நடவடிக்கைகளை தளர்த்துதல்

## முக்கிய அறிவிப்புகள்



**ஆகஸ்ட் 29, 2022 முதல்**

பின்வரும் இடங்களில் மட்டுமே நீங்கள் முகக்கவசங்களை அணிய வேண்டும்:

- பொது போக்குவரத்து



- சேர்க்கை மையங்கள் (ஆன்போர்டு சென்டர்கள்)



- மருத்துவமனைகள்



- உங்கள் உடல் நலம் சரியில்லாத போது





முகக்கவசம் அணிவது பற்றிய கூடுதல் தகவல்களுக்கு, உங்கள் தங்குமிடத்தின் ஆபரேட்டர், முதலாளி அல்லது FAST அதிகாரியை அணுகவும்.



## உங்கள் அறையில் உள்ள QR கோடை ஸ்கேன் செய்யவும்

நீங்கள் தங்கும் விடுதியில் தங்கியிருந்தால், உங்கள் முகவரியைப் புதுப்பிக்க உங்கள் Safe@Home QR குறியீட்டை ஸ்கேன் செய்து தொடரவும், இதன் மூலம் அவசரகாலத்தில் உங்களை விரைவாகத் தொடர்பு கொள்ள முடியும்.

# மன வருத்தமாக உள்ளதா? ஆதரவுக்காக நீங்கள் யாரை அணுகலாம் என்பதற்கான உதவிக்குறிப்புகள்

ஒரு FACE தன்னாலர்வலர் அல்லது சக ஆதரவுத் தலைவருடன் பேசுங்கள்

நீங்கள் சொல்வதைக் காது கொடுத்து கேட்கும் ஒரு நபர் தேவைப்பட்டால், நண்பர்களைத் தேடுங்கள்



உதவிக்கு ACEஇன் FAST அதிகாரிகளை அணுகுங்கள்

யாரிடமாவது பேச வேண்டும் என்றால், ஹெல்ப்லைனை அழைக்கவும்

**பின்வரும் 24-மணிநேர ஹெல்ப்லைன்களை அழைக்கலாம்:**

ஹெல்த்செர்வ்வின் ஹெல்ப்லைன் @3129 5000
புலம்பெயர்ந்த தொழிலாளர் மைய ஹெல்ப்லைன் @ 6536 2692

**உங்களின் ஆரோக்கியமும் நலமும் எங்களுக்கு முக்கியம். கடினமான காலங்களில் நீங்கள் தனியாக இல்லை - எப்போதும் உதவி தயாராக இருக்கிறது.**

**மேலும் மனநல உதவிக்குறிப்புகளுக்கு, தயவுசெய்து இங்கே கிளிக் செய்யவும்.**



## எங்கள் புலம்பெயர்ந்த சமூகம்

இவர் பெயர் யூசுஃப், முன்னாள் கட்டுமானப் பணியாளர், இப்போது செஃப்பாக பணியாற்றுகிறார். இவர் செஃப்பாக மாறியது, இவரின் பெற்றோருக்கே ஆச்சரியமாக இருந்தது. இவருக்கு உண்மையாகவே சமைக்கத் தெரியுமா என்ற கேள்வியை முன்வைத்தனர். தான் சமைத்த உணவுகளை வாடிக்கையாளர்களுடன் பகிர்ந்தார். வீட்டு உணவுப் போல இருப்பதாக அனைவரும் பாராட்டினர். “சிங்கப்பூர்வாசிகள் மற்றும் பிற சக புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் வங்காளதேச உணவை சாப்பிட்டு பார்க்க வேண்டும் என்று நான் விரும்பினேன். எனது சக புலம்பெயர்ந்த சகோதரர்களுக்கு, நீங்கள் வீட்டைப் பிரிந்து இருப்பது வருத்தமாக இருந்தால், இந்த உணவை முயற்சித்துப் பாருங்கள்!”
ஒரு சமையல்காரராக தான் எதிர்கொள்ளும் சவால்கள் மற்றும் உணவைப் பற்றி வாடிக்கையாளர்கள் என்ன நினைக்கிறார்கள் என்பதைப் பற்றி யூசுஃப் பகிர்ந்து கொள்ளும் வீடியோவை இங்கே பாருங்கள்.

***சிங்கப்பூரில் உங்கள் வாழ்க்கையைப் பற்றி பகிர்ந்து கொள்ள சுவாரஸ்யமான கதை இருக்கிறதா? இந்த இணைப்பைக் கிளிக் செய்வதன் மூலம் எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள்***

# நிகழ்வின் சிறப்பம்சங்கள்





## தேசிய தின கொண்டாட்டங்கள்

இந்த தேசிய தினத்தில், பொழுதுபோக்கு மையங்கள் மற்றும் தங்குமிடங்களில் நடத்தப்பட்ட இசை நிகழ்ச்சிகள், கார்னிவல் கேம்கள், ஆர்ட் ஜாமிங் மற்றும் கேரம் போட்டிகள் தவிர, 100க்கும் மேற்பட்ட புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் தேசிய விளையாட்டு அரங்கில் SportSG ஏற்பாடு செய்த உடற்பயிற்சியில் பெருந்திரளாகப் பங்கேற்றனர்.







கூடுதலாக, ACE குழுமம் ItsRainingRaincoats உடன் இணைந்து புலம்பெயர்ந்த தொழிலாளர்களுக்காக தேசிய கேலரி மற்றும் கார்டன்ஸ் பை தி பே ஹெரிடேஜ் சுற்றுப்பயணத்தை ஏற்பாடு செய்தது, அங்கு அவர்கள் கட்டிடங்களின் நீண்ட கால வரலாறு மற்றும் கட்டிடக்கலையை கண்டுகளித்து இயற்கையோடு இழைந்து மகிழ்ந்தனர்.



டன்மேன் உயர்நிலைப் பள்ளியைச் சேர்ந்த மாணவர்களும் புலம்பெயர்ந்த தொழிலாளர்களுடன் உள்ளூர் குழந்தைப் பருவ விளையாட்டுகளில் ஈடுபடுத்திக் கொண்டனர்.

இந்த தேசிய தினத்தை எங்கள் புலம்பெயர்ந்த தொழிலாளர்களுக்கு மறக்கமுடியாத தினமாக மாற்றிய எங்கள் அனைத்து தன்னார்வ தொண்டு நிறுவனங்களுக்கும் எங்கள் கூட்டாளர்களுக்கும் நன்றி!

## S11 மாஸ்டர்செ:ப் சவால்

ஆகஸ்ட் மாதம் சாங்கி லாட்ஜ் ய்ஹங்கும் விடுதி மற்றும் PPT லாட்ஜ் 1B தங்கும் விடுதியில் சமையல் போட்டி நடைபெற்றது.

மிகவும் சுவையான உணவுகள் சமைக்கப்பட்டு, போட்டிகளில் கலந்து கொண்ட பங்கேற்பாளர்களின் ஆர்வம், முயற்சி, உணவு பரிமாறிய விதம் மற்றும் சுவை ஆகியவற்றின் அடிப்படையில் நடுவர்கள் மதிப்பீடு செய்தனர்.

இரண்டு போட்டிகளிலும் வெற்றி பெற்றவர்கள் அந்தந்த தங்குமிடங்களில் உள்ள பல்பொருள் அங்காடிகளில் பயன்படுத்தக்கூடிய வவுச்சர்களைப் பெற்றனர்.

புலம்பெயர் தொழிலாளர்கள் விளையாடுவதற்கும் வேடிக்கை பார்ப்பதற்கும் விளையாட்டு பூத்கள் அமைக்கப்பட்டிருந்தன!





நீங்கள் பங்கேற்கக்கூடிய பல்வேறு **நேரடி மற்றும் இணையவழி** நடவடிக்கைகளைப் பற்றி மேலும் அறிய இங்கே காணப்படும் QR குறியீட்டை ஸ்கேன் செய்யவும்!

*அண்மைய செய்திகள் மற்றும் புதுப்பிப்புகளைப் பற்றி அறிய எங்கள் அதிகாரப்பூர்வ ஒளிவழிகளில் எங்களைப் பின்தொடரவும்!*

- ஏஸ் குழுமத்தின் :பேஸ்புக் பக்கம்
- ஏஸ் குழுமத்தின் டிக்டொக் ஒளிவழி
- மனிதவள அமைச்சின் யூடியூப் ஒளிவழி